போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிவலிங்கம் | வயது | : 64 |
| தந்தை பெயர் | : திருப்பதிகவுண்டர் | வேலை | : விவசாயம் |
| கிராமம் | : புளியம்பட்டி | நாட்டினம் | : இந்து |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | சாதி | : -- |

<u>வா.சா.2 ___ சிவலிங்கம் ஆஜர், குறுக்கு விசாரணை :-</u>

இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க யார் என்னை அழைத்து வந்தது என்றால் வாதி சுரேந்தர் என்னை அழைத்து வந்தார். அவர் எப்போதும் இங்கு வரவில்லை என்றால் இதற்கு முன்பு வந்தார் இன்று அவர் தம்பி வந்துள்ளார். இவ்வழக்கில் யார் யார் பிரதிவாதிகள் என்று தெரியுமா என்றால் அர்ச்சுணன், தமிழரசி, ஸ்ரீராம் சிட்பண்ட்ஸ், தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம், ஆயுள் காப்பீட்டு கழகம் மற்றும் மற்றொருவர். கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திலும் கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். யார் மேற்படி நால்வரிடம் கடன் பெற்றுள்ளார் என்றால் அர்ச்சுணன் தான் பெற்றார். 2ம் பிரதிவாதி தமிழரசி என்ன உறவு என்றால் என்னுடைய தங்கை வாதிகள் அவருடைய மகன்கள். சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பே 1ம் பிரதிவாதி அர்ச்சுணன் 3 முதல் 6 பிரதிவாதிகளிடமிருந்து கடன் பெற்றார் என்றால் அது எனக்கு தெரியாது. 5ம் பிரதிவாதி எற்கனவே கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின்படி சொத்தை ஜப்தி செய்து ஏலம் விட்டார்கள் என்று சொன்னால் சரிதான்

ஏலத்தை எடுப்பதற்கு யாரும் வரவில்லை. இதேபோல் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்திலிருந்து அடிக்கடி பணம் கேட்டு வந்து தொந்தரவு செய்து வந்தார்கள் என்றர் அது எனக்கு தெரியாது. அந்த கடன்களிலிருந்து தப்பிப்பதற்காகத்தான் வாதிகள் பொய்யான பாகப்பிரிவினை வழக்கை தாக்கல் செய்து பாகம் கோரினார்கள் என்று சொன்னால் அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டுதான் பாகம் கோரினார்கள். ஏற்கனவே ஜப்தி ஆகவிட்டதால் கூட்டுறவு சங்கங்கள் சட்டப்படி அந்த சொத்தில் உரிமை கோர எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளதுபோல் அவர்கள் நீதிமன்றத்தில் தீர்ப்பாணை பெற்றிருந்தாலும் அது 5ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிகளின் உறவினர் என்பதால் வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.